**செய்தி வெளியீடு எண்: 156** **நாள்: 21.02.2020**

**செய்தி வெளியீடு**
**தமிழ் வளர்ச்சித் துறை**
**உலகத் தாய்மொழி நாள்**

உலகத் தாய்மொழி நாள் யுனஸ்கோ நிறுவனத்தால் 1999–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21–ஆம் நாளை உலகத் தாய்மொழி நாள் என அறிவிக்கப்பட்டு, அதற்கிணங்க உலகெங்கிலும் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில், உலகின் மூத்த மொழியாகிய நம் தமிழ்மொழியைப் போற்றிடும் வகையில் உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி 21–ஆம் நாளன்று, தமிழ் மொழியின் சிறப்பை இனிவரும் இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டும் எனும் உயரிய நோக்கில் மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2013–2014 ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் போது **'உலகத் தாய்மொழி நாள்'** பிப்ரவரி 21–ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் கவியரங்கம், கருத்தரங்கம் நடத்திக் கொண்டாட அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கிணங்க, ஒவ்வொரு ஆண்டும் உலகத் தாய்மொழி நாள் தமிழ் வளர்ச்சித் துறையால் கொண்டாடப்பட்டு வருகிறது. அதேபோன்று இவ்வாண்டும் உலகத் தாய்மொழி நாள் 21.02.2020ஆம் நாளன்று சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள பேறறிஞர் அண்ணா கருத்தரங்குக் கூடத்தில் காலை 9.00 மணிக்கு தமிழ்நாடு இசைக் கல்லூரி மாணவர்களின் மங்கள இசையுடன் தொடங்கி காலை 10.00 மணிக்கு தமிழிசைப் பாடகர் முனைவர் இர.காஷ்யப் மகேஷ் அவர்களின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திருமதி அ. புவனேஸ்வரி அவர்கள் முன்னிலை உரையாற்றியும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் தலைமையுரையாற்றியும் மேனாள் தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் வைகைச் செல்வன் அவர்கள் தாய்மொழி நாளுரையாற்றியும், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் விழாப் பேருரையாற்றியும் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், முனைவர் அரங்க.பாரி, பேராசிரியர் முனைவர் ப.சிவராஜி, பேராசிரியர் செ.ஏழுமலை, திரு. ஜெ.வா. கருப்பசாமி மற்றும் செல்வி சொ. கலைச்செல்வி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் முதல் நிகழ்ச்சியாக நடைபெற்ற இளையோர் அரங்கத்தில் திரு.பழ.பாசுகரன் அவர்களின் தலைமையில் 'உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே' என்ற தலைப்பில் நந்திவரம் பா.சம்பத் குமார் அவர்களும், 'சிம்புட் பறவையே சிறகை விரி' என்ற தலைப்பில் திருமதி ரேகா மணி அவர்களும், 'தமிழரிடை எழுச்சியுறும் தமிழார்வம் கொழுத்த தீ' என்ற தலைப்பில் திரு. கோ. மணி அவர்களும்,'தாயெழிற் றமிழை என்றன் தமிழரின் கவிதை

தன்னை' என்ற தலைப்பில் செல்வி வெ. இர. வர்சா அவர்களும், 'சிறுத்தையே வெளியில் வா' என்ற தலைப்பில் செல்வன் மு. முனீசுவரன் அவர்களும், 'இசைக்க சங்கத் தமிழ்' என்ற தலைப்பில் செல்வன் சீ.வே. கார்த்திக் ஆகியோரின் எழுச்சிமிகு இளையோர் அரங்கம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து **எங்கும் தமிழ் எதிலும் தமிழ். . .** என்ற தலைப்பில் **முனைவர் பாலரமணி** அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. இக்கவியரங்கத்தில் **கவிஞர் செம்மங்குடி துரையரசன், கவிஞர் தாமரைப்பூவண்ணன், கவிமாமணி ரேவதி இராதாகிருஷ்ணன்**, **கவிமாமணி ச.முத்துப்பாண்டியம்மாள், கவிமாமணி சாந்தி திருநாவுக்கரசு** ஆகியோர் பங்கேற்று கவிபாடினர்.

மேலும் **உயிரே எங்கள் தமிழே . . .** என்ற தலைப்பில் **திரு. பாரதி சுகுமாரன்** அவர்களின் தலைமையில் **கருத்தரங்கம்** நடைபெற்றது. இக்கருத்தரங்கில் **முனைவர் கலியன் சம்பத்து, கவிஞர் வளவனூர் இரா.முருகன், முனைவர் சு. சதாசிவம், வழக்கறிஞர் ஆ.கு. நிறைமதி, கவிஞர் மா.ப. வானரசன், திருமதி சு. ஜெயக்குமாரி** ஆகியோர் பங்கேற்று கருத்துரை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியின் முடிவில் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திரு. வ.சுந்தர் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**